**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**Ar.O.P. No.18/2021**

**நாள்.06.02.2025**

எ.ம.சா.1 திருமதி.கோமதி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனு சொத்தை ஆர்ஜிதம் செய்த சமயத்தில் நான் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். ஆனால் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் சொல்லியுள்ளேன். ஆர்ஜிதம் செய்த இடத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் நான்குமால்கள் விவரம், நான் மாதிரி இடத்தில் உள்ள நான்குமால்களை வைத்து கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மாதிரி இடத்திற்கு நான்குமாலாக எந்த இடத்திலும் மெயின்ரோடு காட்டப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி ஆவணங்களை பார்த்து தெற்குபக்கம் பொதுப்பாதை காட்டப்பட்டுள்ளதாக சொல்கிறார். எ.ம.சா.ஆ.3 கிரைய பத்திரத்தில் அந்த தரப்பினர்கள் தங்களுக்குள் செய்துகொண்ட பொதுப்பாதையைத்தான் நான் குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். எ.ம.சா.3 ல் வடக்கு நான்குமாலாக வாய்க்கால் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடமான சர்வே எண். 202/1B சொத்தினை ஒட்டி நயினார்கோவில் செல்லும் ரோடு உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. நான் தற்போது அந்த நிலத்தினை போய் பார்த்தேனா என்றால் இல்லை. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு சந்தை மதிப்பின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஒரு சொத்தின் அரசு வழிகாட்டுதல் மதிப்பிற்கும், சந்தை மதிப்பிற்கும் உள்ள வேறுபாடு தெரியும். பொதுவாக அரசு வழிகாட்டுதல் மதிப்பை விட 3 மடங்கு அதிகமாக சந்தை மதிப்பு இருக்கும் என்றால் சரிதான்.

நில ஆர்ஜிதம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் முன்பு நடந்த விசாரணையில் மனுதாரர்கள் தரப்பில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன என்ற விவரத்தை நான் பார்த்தேனா என்றால் மாவட்ட ஆட்சியர் விசாரணையில் நான் பங்கு கொள்ளவில்லை என்பதால் பார்க்கவில்லை. சாட்சி சொல்ல வருவதற்கு முன்பாக அந்த ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மனுதாரர் சொத்திற்கு அருகில் உள்ள சொத்துக்கள் என்ன விலைக்கு கிரையம் செய்யப்பட்டுள்ளன என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 5 கிரைய பத்திரங்களை அவர் தாக்கல் செய்துள்ளார். அதில் உள்ள கிரைய தொகையை நான் தெரிந்து கொண்டேன். மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கிரைய பத்திரங்களின் கிரையத் தொகையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் இழப்பீடு நிர்ணயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரரின் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு அருகில் நிறைய குடியிருப்புகள் இருந்தன என்றால் அப்போது இல்லை. நஞ்சை விவசாய நிலமாகத்தான் இருந்தது. மாவட்ட ஆட்சியர் சொல்லிக்கொடுத்ததை வைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது நீதிமன்றத்தில் மனுதாரர் என்னென்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். கிரைய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட கிரைய ஆவணங்களின் மதிப்புகளை நான் தெரிந்து கொண்டேன். மேற்படி கிரைய ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள கிரையத்தொகைகள் மாவட்ட சிறப்பு வருவாய் அலுவலரால் நிர்ணயம் செய்த இழப்பீட்டு தொகையைவிட அதிகமாக உள்ளன என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.2 புள்ளிவிவர பட்டியலின் அசல் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. அந்த ஆவணத்தின்படி, சர்வே எண். 220/2 நிலத்திற்கு சதுர மீட்டர் 1க்கு ரூ.865 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

சரிதான். அது 01.04.2012 க்குப்பின்பு மேற்படி தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் இணை சார்பதிவாளர், இராமநாதபுரத்திலிருந்து வந்த ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தில் ஹெக்டேர் 1 க்கு ரூ.1,47,000/- என அரசு வழிகாட்டுதல் மதிப்பின்படி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.3 ஆவணத்தின் அசல் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் சரிதான். அசல் ஆவணம் இல்லாமல் நகலை உண்மை நகல் என்று சான்றிட்டு வழங்க முடியாது என்றால் சார்பதிவாளர் கொடுத்த நகலின் அடிப்படையில்தான் நாங்கள் உண்மை நகல் என்று சான்றிட்டு வழங்கினோம். சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலரும், மாவட்ட ஆட்சியரும் ஆர்ஜிதம் செய்த மனு சொத்திற்கு நிர்ணயம் செய்த இழப்பீட்டுத்தொகை குறைவானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/-ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .